بسم الله الرحمن الرحيم

# QUESTION & ANSWER :

# BIRTH RITUALS IN ISLAM



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (atba)**

**25/09/2016**

ஹிஜ்ரா 15-ம் நூற்றாண்டின் (இந்நூற்றாண்டின்) இறைத்தூதர் ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம்(அலை) அவர்களிடம், கேரளா ஜமாஅத்து சஹீஹில் இஸ்லாமை சார்ந்த ஒரு உறுப்பினர் கேட்ட கேள்வியும் அதற்கு ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் அளித்த பதிலும்

**Question : Would you please explain the main Sunnah/ Practices following Birth?**

**கேள்வி : ஒரு குழந்தை பிறக்கும் பொழுது கடைபிடித்துக் கொள்ள வேண்டிய முக்கியமான நடைமுறைகள் (ஆசாரங்கள்) யாவை?**

**Answer** ( பதில்):

**1. Birth & Purification (Bath):** **பிறப்பும் சுத்தம் செய்தலும் (குளிப்பாட்டுதல்)**

❖ குழந்தை ஆணாகயிருந்தாலும் பெண்ணாகயிருந்தாலும் பெற்றெடுத்தப்பின் குளிப்பாட்டி, நன்றாக துடைத்து சுத்தம் செய்ய வேண்டும்.

**2. Adhaan & Iqamah:** **"பாங்கும் இக்காமத்தும்" கேட்பிக்க வேண்டும்.**

❖ குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோயிருந்தாலும் வலது பக்கம் செவியில் பாங்கும் இடது பக்கம் செவியில் இக்காமத்தும் கேட்பிக்க வேண்டும்.

**3. Tahneek:** **இனிப்பு ஊட்டுதல்**

❖ புதியதாக பெற்றெடுத்த ஒரு குழந்தையை தூய தூதர் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களின் அருகாமையில் கொண்டு வந்தபோது அன்னார் பேரீச்சம்பழத்தின் ஒரு சிறிய துண்டு எடுத்து தனது வாயில் வைத்து சற்று நனைவுபடுத்திய பிறகு அக்குழந்தையின் உள் நாவில் வைத்து கொடுத்தார். (புகாரி முஸ்லீம் மற்றும் சிலர் ரிப்போட் செய்யப்பட்டிருக்கின்றது) ஆகவே இஸ்லாமின் இந்த நடைமுறையினை பின்பற்றிக் கொள்வது இறைவிருப்பத்திற்கேற்ற விஷயமாகும். கிடைத்து விடுமேயானால் பேரீச்சம்பழத்தின் நீரோ அல்லது தேனோ வழங்கிக்கொள்ளலாம்.

**4. Naming the Child:** **குழந்தைக்கு பெயர் சூட்டுதல் :**

❖ குழந்தைக்கு மிக நல்ல வகையிலான பெயர் சூட்ட வேண்டும். தேவையென்றால் பெயர் சூட்டுவதற்காக ஏழுநாட்கள் வரையிலும் எடுத்துக் கொள்ளலாம்.

**5. Circumcision:** **பரிச்சேதம் :**

❖ சுன்னத் செய்தல், அது ஆண் குழந்தைகளுக்கு கட்டாயமாக செய்து கொள்ளவேண்டிய சுன்னத் கடமையாகும். காரணம் இது இஸ்லாமின் அடையாளங்களில் உட்பட்ட விஷயம் என்று மட்டுமின்றி அது இயற்கைக்குப்பட்டதுமாகும். முதல் வாரத்திற்குள்ளேயே இது செய்துக் கொள்ளலாம். நேரமே செய்துக் கொண்டால் குழந்தைக்கு அது அமைதியை அளித்துவிடும். அல்லது சற்று தாமதமாகவும் (குழந்தை பருவத்தில்) செய்து கொள்ளலாம். ஆனால் நான் உங்களிடம் (ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாம்) கூறிக் கொள்வது சற்று நேரமே செய்துக் கொள்ள வேண்டும் என்றாகும். ஏனெனில் நேரமே செய்துக்கொண்டால் குழந்தைக்கு எவ்வித வேதனையும் இருக்காது.

அதற்கு தாமதமாகிவிட்டால் குழந்தைக்கு அது மிக வருத்தமுடையதாகி விடலாம். (ஆண் குழந்தைகளுக்கு மட்டும்)

## 6. Shaving The Head: முண்டனம் (தலை மழித்தல்) :

❖ ஆண் குழந்தையாகயிருந்தாலும் பெண் குழந்தையாகயிருந்தாலும் ஏழு நாட்களுக்குள் தலை மழித்திடவேண்டும். முண்டனம் செய்த முடியின் எடைக்கு துல்லியமான வெள்ளி அல்லது தங்கம் (அல்லது பணம்) நல்ல விஷயத்திற்காக "சதக்காவாக" வழங்கி கொள்ள வேண்டும். பிறகு முண்டனம் செய்த முடியினை பூமிக்குள் மறைத்துக் கொள்ளவும் வேண்டும்.

## 7. AQIQA : "அகீகா" :

❖ ஹஸ்ரத் ஆயிஷாபீவி(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றார். ஆண் குழந்தைகளுக்கு ஒரே தரத்தைக் கொண்ட இரண்டு ஆடுகளையும் பெண் குழந்தைக்கு ஒரு ஆட்டினையும் பலி அர்பித்துக் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார். (திர்மிதி அபூதாவூத் இப்னுமாஜா) **"அகீகா"**வை குறித்து எழுப்பிய கேள்விக்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அளித்த பதில் இவ்வாறாகும். பிறந்தது ஆணா பெண்ணா என்பது விஷயமல்ல. ஆண் குழந்தையாகயிருந்தால் இரண்டு ஆடுகளையும் பெண் குழந்தையாகயிருந்தால் ஒரு ஆட்டினையும் (பலி) அர்ப்பித்துக் கொள்ள வேண்டும் (திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா)

சல்மான் இப்னு அமீர்(ரலி) அவர்கள் ரிப்போட் செய்ததாக காணலாம். தூய தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் ஆண் குழந்தைக்கு ஒரு அகீகா இருக்கின்றது. அக்குழந்தைக்காக ஒரு விலங்கினை பலி அர்ப்பித்துக் கொள்ள வேண்டும். அக்குழந்தை கவலைக்காளாகி கொள்ளாமலிருப்பதற்காக (பரிச்சேதம்) சுன்னத்து திருமணமும் நடத்திக் கொள்ளவேண்டும். (திர்மிதி, அன்னாசஈ, அபுதாவூத், இப்னுமாஜா)

சமுர்ற இப்னு ஜுன்துப்(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். தூய தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள், ஆண் குழந்தைக்கு ஒரு அகீகா உண்டு. அவனுக்காக ஒரு விலங்கினை பலி அர்ப்பித்துக் கொள்ளுங்கள். அவனுக்கு எவ்வித சுமையும் இல்லாமல் இருப்பதற்காக (பரிச்சேதனம்) சுன்னத்து திருமணமும் நடத்திக்கொள்ளுங்கள். (திர்மிதி, அன்னசாஈ, அபுதாவூத், இப்னுமாஜா)

சமுர்ர இப்னு ஜுன்துப்(ரலி) அவர்கள் கூறியதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது. தூய தூதர்(ஸல்) அவர்கள் கூறினார். ஒரு ஆண் குழந்தையை அகீகா வாயிலாக திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும். ஏழு நாட்கள் அவனுக்காக அகீகா வழங்க வேண்டும். அவனுக்கு ஒரு

பெயரும் சூட்ட வேண்டும். தலை மழித்துக் கொள்ளவும் வேண்டும் (திர்மிதி, அன்னசாஈ, அபுதாவூத், இப்னுமாஜா)

புதிதாக பிறக்கும் குழந்தைக்காக “சதக்கா”வாக இஸ்லாமின் நடைமுறைப்படி ஒரு விலங்கினை பலியர்ப்பித்துக் கொள்வதை “அகீகா” என கூறப்படுகின்றது. அது வாயிலாக அல்லாஹ் அவனை அல்லது அவளை எல்லா விதமான கவலைகளிலிருந்தும் பாதுகாத்துவிடலாம். அது, புதிதாக பிறக்கும் குழந்தைக்காக வழங்கிக் கொள்ளும் ஒரு பரிசும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தலுமாகும். மாமிசத்தின் ஒரு பகுதி ஏழைகளுக்கும் குடும்பத்தை சார்ந்த நெருங்கியவர்களுக்கும் மற்றொரு பகுதி வீட்டின் சுய பயனுக்காகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது ஏழைகளுக்காகவும் குடும்பத்தை சார்ந்த நெருங்கியவர்களுக்காகவும் குடும்ப உறுப்பினர்களுக்காகவும் சேர்த்து சமைத்து மதிய உணவாகவோ அல்லது இரவு உணவாகவோ பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**Translated By:** **Mohammed Sabir**
**E-mail:** mohammedsabir2542@gmail.com

**Proof Reader:**
**Azim Ahmad,**
**Mob. No: 9789180817**

**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam**
**Dawa Department**
**Tamil Nadu, India - Mob :7339689239**
**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**